DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO. 238/2019

**Depositions of PW 11**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **பாலசந்திரன்** | **Caste** | |
| **Father's Name** | **ராமலிங்கம்** | **Calling** | **மருத்துவர்** |
| **Village** | **மதுரை** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th Day of March 2026.

Signature of Witness.

<u>06.03.2026</u>

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

**(சாட்சி காணொளி வாயிலாக சாட்சியம் அளித்தார்)**

நான் மதுரையிலுள்ள லட்சுமணா மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 29.01.2019 ஆம் தேதி மதியம் 12.06 மணியளவில் செந்தில்குமார் என்பவர் மயங்கிய நிலையில் சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டார். அவரை உள்நோயாளியாக

அனுமதித்து சிகிச்சையளித்தேன். அவர் 51 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அவருக்கு உடலில் பல்வேறு பகுதிகளில் காயங்கள் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கினேன். சாட்சியால் வழங்கப்பட்ட காயச்சான்று **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இருநபர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பேசிக்கொண்டே வேகமாக சென்று கவனக்குறைவாக எதிரே வரும் கனரக வாகனத்தின் மீது மோதி கீழே விழுந்தால் செந்தில்குமாருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவருக்கு உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.